بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *09/04/2021* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢
اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு எடுத்துரைக்கப்பட்டு வந்தது. அன்னாருடைய அந்தஸ்து என்னவாக இருந்தது என்பதைக் குறித்து ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் நாங்கள், மக்களுள் ஒருவரை விட இன்னொருவரை சிறந்தவராக கருதி வந்தோம். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைவரையும் விட சிறந்தவர் என்று கருதினோம். அதன் பிறகு ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி). அதன் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி).

இதேபோன்று இன்னொரு அறிவிப்பில் முஹம்மது பின் ஹன்ஃபியா அவர்கள் தனது தந்தை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், முஸ்லிம்களுள் சிறந்த மக்களைக் குறித்து வினவினார்கள். அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் இதே வரிசை முறையை எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குப் பிறகு அனைவரையும் விட தாங்கள் சிறந்தவரா? என்று கேட்கப்பட்ட போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், நான் முஸ்லிம்களில் ஒரு சாதாரண நபர் ஆவேன் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பார்வையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு இருந்த அந்தஸ்து குறித்து இந்த சம்பவத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.** ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஒருவருடைய ஜனாஸா கொண்டு வரப்பட்டது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவருடைய ஜனாஸா தொழுகையை தொழ வைக்கவில்லை. அப்போது ஒருவர் யா ரஸூலல்லாஹ்! இதற்கு முன் நீங்கள் ஒருவருடைய ஜனாஸா தொழுகையை விட்டதாக நாங்கள் கண்டதில்லையே! என்றார். அதற்கு அன்னார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இந்த நபர் உஸ்மானுடன் பகைமை கொண்டிருந்தார்; ஆகவே அல்லாஹ் இவருடன் பகைமை கொண்டுள்ளான் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நீதியை நிலைநாட்டிய விதம் குறித்து ஒரு சம்பவம் வருகிறது.** ஒரு முறை அன்னாருடைய சகோதரர் வலீது அவர்களைக் குறித்து புகார் வந்தபோது, தம்முடைய சகோதரருக்கும் அன்னார் தண்டனை வழங்கினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நெருங்கிய உறவு முறையை கருத்தில் கொள்ளவில்லை. எந்த அளவுக்கு என்றால், நெருங்கிய உறவின் காரணமாக அவருக்கு இருமடங்கு தண்டனை வழங்கினார்கள். 40 கசையடிகளுக்குப் பதிலாக 80 கசையடிகளை அடிக்க செய்தார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஹம்ரான் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச் செய்தார்கள். மேலும் நன்றாக உளூ செய்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கூற்றை எடுத்துரைத்தார்கள். அதாவது, ‘‘எவர் என்னைப் போன்று உளூ செய்து, தனது நஃப்ஸிடம் உரையாடாமல் என்னைப் போன்று இரண்டு ரக்அத்துகள் தொழுவாரோ அவருடைய

முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடும்'' என ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

ஜுமுஆ நாளில் இரண்டாவது பாங்கு அதிகரிக்கப்பட்டதும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய காலத்தில் நடந்த விஷயமாகும். அதற்கு முன்பு ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரின் காலத்தில் இமாம் சொற்பொழிவு மேடையில் அமரும்போது முதல் பாங்கு கூறப்பட்டு வந்தது. பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய காலத்தில் மக்களுடைய எண்ணிக்கை அதிகரித்த போது, அக்காலத்தில் இரண்டாவது பாங்கு கூறக்கூடிய நடைமுறை தோன்றியது. பள்ளிவாசலின் கதவருகில் கிடந்த பாறை மீது நின்று அந்த பாங்கு கொடுக்கப்பட்டது.

பெருநாளின் போது ஜுமுஆ தொழுகையை விடும்படி, விடுப்பு வழங்கப்பட்டது குறித்து அறிவிப்பு காணக்கிடைக்கிறது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பெருநாள் தொழுகையை தொழ வைத்தார்கள். அது ஜுமுஆ நாளாக இருந்தது. குத்பாவுக்கு முன்பு அன்னார் தொழ வைத்தார்கள். அதன்பிறகு மக்களிடம் சொற்பொழிவாற்றினார்கள். 'மக்களே! இந்நாளில் உங்களுக்கு இரண்டு பெருநாள்கள் ஒன்று சேர்ந்துள்ளன. ஆகவே மதீனாவைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் ஜுமுஆவுக்காக காத்திருக்க விரும்பினால் அவர் காத்திருக்கலாம். மேலும், எவர் திரும்பிச் செல்ல விரும்புகிறாரோ அவர் திரும்பிச் செல்ல என் சார்பாக அனுமதி உள்ளது' என்று கூறினார்கள்.

ஃபிக்கா அஹ்மதிய்யாவில் ஒரு விஷயம் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அதைக் குறித்து இதுவரை எனக்கு தெளிவான சான்று ஒன்றும் கிடைக்கவில்லை. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரலி) அவர்களுடைய ஒரு அறிவிப்பு அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. 'ஒரே நாளில் இரண்டு பெருநாள்கள் ஒன்று சேர்ந்தால் அவற்றை ஒன்றாக தொழுது கொள்ளுங்கள்' என்று ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரலி) கூறினார்கள். ஆகவே அன்னார் மதியத்திற்கு முன்பு இரண்டு பெருநாள்களுக்கும் சேர்த்து இரண்டிரண்டு ரக்அத்துகளை தொழுதார்கள். அதன்பிறகு அஸர் வரை எந்தத் தொழுகையையும் தொழவில்லை.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* இது குறித்து மேலும் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. இதைத்தான் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் கூறினார்கள். ஏனென்றால் லுஹர் தொழுகையையும் விட்டுவிட்டதாக எந்த ஒரு அறிவிப்பும் நேரடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நடைமுறை வரை சென்றதாக நிரூபணமாகவில்லை.

ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஜுமுஆ குத்பா கொடுத்துக் கொண்டிருக்கும் போது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் அவர்கள், மக்களுக்கு என்னவாயிற்று! அவர்கள் பாங்குக்குப் பிறகும்கூட தாமதமாக வருகிறார்களே என்று சுட்டிக் காட்டியவாறு கூறினார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், அமீருல் முஃமினீன் அவர்களே! பாங்கோசை கேட்ட உடனேயே நான் உளூ செய்து விட்டு வந்து விட்டேன் என்றார்கள். உளூ மட்டும்தானா? என்று கேட்டவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'உங்களில் ஒருவர் ஜுமுஆவுக்காக வரும்போது குளித்துவிட்டு வரவேண்டும்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நீங்கள் கேட்கவில்லையா? என்றார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹதீஸுகளை அறிவிப்பதில் அதிகபட்ச முன்னெச்சரிக்கையை பேணி வந்தார்கள். ஏனென்றால் மற்ற சஹாபாக்களைவிட ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஹதீஸுகள் மிகக் குறைவே ஆகும். அன்னார் அறிவித்தது மொத்தம் 146 அறிவிப்புகள் ஆகும். 'எவரொருவர் நான் கூறாத ஒன்றை நான் கூறியதாக என்னை நோக்கி சுட்டிக்காட்டுவாரோ அவர் நரகத்தை தனது

தங்குமிடமாக ஆக்கிக் கொள்கிறார்' என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக நான் கேட்டுள்ளேன் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்.

அறிவிப்புகளில் கூறப்பட்டதற்கிணங்க ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எட்டு திருமணங்கள் செய்துள்ளார்கள். இந்த அனைத்து திருமணங்களையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகே செய்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "அபூபக்ர், உமர் உஸ்மான், அலீ ரிழ்வானுல்லாஹி அஜ்மயீன் ஆகியோரின் பண்புகளை உருவாக்காதவரை எவராலும் நம்பிக்கையாளராகவோ, முஸ்லிமாகவோ ஆக முடியாது என்பதை நான் அறிகின்றேன். இவர்கள் அனைவரும் உண்மையிலேயே மார்க்கத்தில் நம்பிக்கைக்குரியவர்களாக திகழ்ந்தனர். இவர்கள் தம் வாழ்க்கையை இறைவழியில் அர்ப்பணித்திருந்தார்கள்."

**அன்னார் (அலை) கூறுகிறார்கள்:** "இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் இந்த இரு சான்றோர்களையும் (அதாவது அபூபக்ர் மற்றும் உமர்) அத்துடன் மூன்றாமவர் துன் நூரைனையும் (அதாவது உஸ்மான்) - இவர்கள் ஒவ்வொருவரும் எப்படிப்பட்ட மக்கள் என்றால் இஸ்லாத்தின் வாசலிலும், படைப்பினங்களில் சிறந்தவராகிய ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் படையின் முன்னணியிலும் இருக்கும்படி அல்லாஹ் இவர்களை ஆக்கியுள்ளான்."

**பிறகு ஷியாக்களைக் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "உங்களுடைய ஏச்சுப் பேச்சுக்களை கண்டு நாம் என்ன முறையீடு செய்வது? ஏனென்றால் நீங்கள் சஹாபாக்களை ஏசுகிறீர்கள்; நம்பிக்கை கொண்டோரின் தாய்மார்களை சாபத்துடன் நினைவு கூருகிறீர்கள். மேலும் இறை வேதத்தில் சிறிது கூட்டப்படும் சிறிது குறைக்கப்பட்டும் உள்ளது என கருதுகிறீர்கள். அது இறைவன் புறமிருந்து இறங்கவில்லை. மாறாக உஸ்மானின் குறிப்புகள் என கூறுகின்றீர்கள். காய்ந்த நிலமாகவும், பயிரற்று காலியாக இருக்கும் பாலைவனத்தைப் போன்றும் இஸ்லாத்தை கருதுகிறீர்கள்."

**அன்னார் (அலை) கூறுகிறார்கள்:** "கிலாஃபத்தைக் குறித்து எனது இறைவனிடமிருந்து எனக்கு அடிப்படையான ஆய்வு ஞானம் வழங்கப்பட்டுள்ளது. சித்தீக், ஃபாரூக், உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர் நற்செயல் புரிபவர்களும், நம்பிக்கை கொண்டோரும் ஆவர் என என் இறைவன் என் மீது வெளிப்படுத்தியுள்ளான். மேலும் அவர்கள் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைச் சார்ந்தவர்களாவர்."

இத்துடன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்புகள் முற்றுப்பெறுகின்றன. இனிமேல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு ஆரம்பமாகும் இன்ஷாஅல்லாஹ்.

*இதன்பிறகு ஹுஸூர் அவர்கள், அல்இஸ்லாம் குழுவின் சார்பாக உருவாக்கப்பட்டுள்ள திருக்குர்ஆனுடைய புதிய சர்ச் எஞ்சினுடைய முதல் வெர்ஷனை துவக்கி வைப்பது குறித்து அறிவிப்பு செய்தார்கள்.* "இந்த வெப்சைட்டை அல்இஸ்லாம் செல்லாமல் தனியாகவும் பார்க்க இயலும். எந்த ஒரு சூராவையும், ஆயத்தையும், சொல்லையும், கருத்தையும் அரபி, ஆங்கிலம், உருதுவில் ஒரு புதிய சர்ச் எஞ்சினுடன் தேடலாம். அவ்வாறே திருக்குர்ஆன் ஓதுவதற்கு, கேட்பதற்கு, சர்ச் செய்வதற்கு புதிய தோற்றத்தில், அழகிய வெர்ஷன் அல்இஸ்லாம் வெப்சைட்டில் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த ப்ராஜெக்ட் திருக்குர்ஆனின் அழகிய போதனையை உலகில் பரப்புவதற்கு காரணமாக அமையவும், ஜமாத்தினர்களும் இவற்றிலிருந்து முழுமையாக பயனடையக் கூடியவர்களாகவும் ஆகவும் அல்லாஹ்விடம் துஆ செய்கிறேன்."

*அதன் பிறகு ஹுஸூர் அவர்கள் பாகிஸ்தான் மற்றும் அல்ஜீரியாவுடைய அஹ்மதிகளுக்காக மீண்டும் ஒருமுறை துஆவுக்காக அறிவித்தார்கள்.*

*அதன் பிறகு ஹுஸூர் அவர்கள், மதிப்பிற்குரிய முஹம்மது சாதிக் சாஹிப் துர்காரம்பூரி, தாருல் யமன் ரப்வாவைச் சார்ந்த ரஷீது அஹ்மது அட்வால் சாஹிபுடைய மனைவியாகிய மதிப்பிற்குரிய முக்தாரான் பீவீ சாஹிபா, மதிப்பிற்குரிய மன்ஸூர் அஹ்மது ஷாத் சாஹிப், USA வைச் சார்ந்த அப்துர் ரஹ்மான் சலீம் சாஹிபுடைய மனைவியாகிய மதிப்பிற்குரிய ஹமீதா அக்தர் சாஹிபா, ஜெர்மனியைச் சார்ந்த மதிப்பிற்குரிய நாஸிர் பீட்டர் லூட்ஸின் சாஹிப், கனடாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய ரஸியா தன்வீர் சாஹிபா, சர்கோதாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய மியான் மன்ஸூர் அஹ்மது காலிப் சாஹிப், மதிப்பிற்குரிய புஷ்ரா ஹமீது அன்வர் அத்னீ சாஹிபா, மதிப்பிற்குரிய நூருஸ் ஸபாஹ் ஸஃபர் சாஹிபா, மதிப்பிற்குரிய சுல்தான் அலீ ரீஹான் சாஹிப், உர்தனைச் சார்ந்த மதிப்பிற்குரிய காலிது சஅதுல்லாஹ் அல்மிஸ்ரி சாஹிப், ரப்வாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது முனீர் சாஹிப், ரப்வாவைச் சார்ந்த மாஸ்டர் நஸீர் அஹ்மது சாஹிப் ஆகியோரின் நற்குறிப்புகளை எடுத்துக் கூறினார்கள்.*

*ஹுஸூர் அவர்கள், ஜம்மு காஷ்மீர் மாநிலம், ராஜோரி மாவட்டம், காலாபன்னைச் சார்ந்த வாழ்வை அர்ப்பணித்த ஜமாஅத்தின் முபல்லிக் ஆகிய மவ்லவி குலாம் காதிர் சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:* **"அன்னார் மார்ச் 26 அன்று 56 ஆம் வயதில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.**

**மர்ஹூமுடைய குடும்பத்தில் அவருடைய பாட்டனார் மதிப்பிற்குரிய பஹாதுர் அலீ சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் கிடைத்தது. இந்தக் குடும்பத்தைச் சார்ந்த 13 நபர்கள் அல்லாஹ்வின் அருளால் தற்போது ஜமாஅத் தொண்டில் ஈடுபட்டுள்ளனர். முப்பத்தி நான்கரை ஆண்டுகள் முபல்லிக் ஆக தொண்டாற்றும் நற்பேறு பெற்றுள்ளார்கள். மர்ஹூம் அவர்கள் எங்கெல்லாம் நியமிக்கப்பட்டார்களோ அங்கெல்லாம் முகமலர்ச்சியுடன், முழு உழைப்புடன், ஆர்வத்துடன் தஃலீம், தர்பிய்யத் பொறுப்புகளை இறுதி மூச்சுவரை நிறைவேற்றி வந்தார்கள். தப்லீக் செய்வதில் நல்ல திறமை பெற்றிருந்தார். தப்லீக் களத்தில் ஏற்படக்கூடிய துன்பங்களை, எதிர்ப்புகளை உறுதியாக நின்று சந்திக்கக் கூடியவராக இருந்தார். மிகவும் பொறுமையான, நன்றி கூறக்கூடிய, போதுமென்ற மனமுள்ள, துணிவுள்ள முபல்லிக் ஆக இருந்தார். இவர் தமக்குப் பின்னால் மனைவி மட்டுமின்றி மூன்று மகன்களையும், இரு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார். பஷீருத்தீன் காதிர் என்ற ஒரு மகன் ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானில் இறுதியாண்டு படித்து வருகிறார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக."**

*காதியானுடைய தர்வேஷ் முஹம்மது சாதிக் ஆரிஃப் சாஹிப் அவர்களின் துணைவியாராகிய மதிப்பிற்குரிய மஹ்மூதா பேகம் சாஹிபா அவர்களுடைய நற்குறிப்புபை எடுத்துரைத்தவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* **"ஏப்ரல் 1 ஆம் தேதி 85 ஆம் வயதில் இதயம் செயலிழந்ததன் காரணமாக மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். மர்ஹூமா அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் காஸி அஷ்ரஃப் அலீ சாஹிப் அவர்களின் மகன் வழி பேத்தியும், மர்ஹூம் காஸி ஷாது பக்-ஷ் சாஹிப் அவர்களின் மகளுமாவார்கள். மர்ஹூமா அவர்கள் தர்வேஷிய காலகட்டத்தை தமது கணவருடன் மிகவும் பொறுமையுடனும், நன்றியுடனும் கழித்தார்கள். தொழுகைகளைப் பேணக்கூடியவராக இருந்தார். மேலும் திருக்குர்ஆன் ஓதுவதை மிகவும் பேணி செயல்பட்டு வந்தார். மிகவும் முறையாக சந்தாக்களை செலுத்தி வந்தார். கிலாஃபத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். இதுகுறித்து குழந்தைகளுக்கும் அறிவுரை கூறி வந்தார்கள். மர்ஹூமா அவர்கள் வஸிய்யத் செய்துள்ளார்கள். தமக்குப் பின்னால் மூன்று மகன்களையும், இரண்டு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக."**

*மேலும் ஹுஸூர் அவர்கள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இந்த அனைத்து மர்ஹூம்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது)